**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110292

1. District மாவட்டம்: Karur    PS காவல்நிலையம்: V d AC    Year ஆண்டு: 2020    FIR No. மு.த.அ. எண்: 04/20    Date நாள்: 09.07.20

2. (i) Act சட்டம்: PC Act 1988 as    Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: amended by the PC    Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018    Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் :    Date from நாள் முதல் :    Date to நாள் வரை : 02.07.2020 06.07.2020 07.07.2020
Time Period நேர அளவு :    Time from நேரம் முதல் :    Time to நேரம் வரை :
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 09.07.20    Time நேரம் : 19.45
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 09.07.20    Time நேரம் : 21.00

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 3 KM கிழக்கு
Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி கரூர் கோட்டாட்சி அலுவலகம், கரூர்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் அருந்தேவன்    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பசவ ரெட்டியா
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு    (d) Nationality : நாட்டினம் இந்தியன்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் [illegible]    (g) Address : முகவரி தொழிற்பேட்டை ஆசிரியர் காலனி, சணப்பிரட்டி கிராமம், கரூர் வட்டம், கரூர் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திருமதி. ரேவதி, வருவாய் உதவியாளர் 35-வது வார்டு, கோட்டாட்சி அலுவலகம், கரூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்தனுப்படுகிறது.

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 09.07.2020 ஆம் தேதி 19.45 மணிக்கு நிலையத்தில் இருந்த போது கரூர் மாவட்டம், கரூர் வட்டம், சணப்பிரட்டி கிராமம், தொழிற்பேட்டை, ஆசிரியர் காலனியைச் சேர்ந்த பசுவ ரெட்டப்பா மகன் அந்தப்பன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த, கம்பியூட்டர் மூலம் தயார் செய்த புகாரை பெற்று கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் B.அந்தப்பன், த/பெ. பசுவ ரெட்டப்பா, தொழிற்பேட்டை, ஆசிரியர் காலனி, சணப்பிரட்டி கிராமம், கரூர் வட்டம், கரூர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, கரூர். அய்யா, நான் மேற்கண்ட விலாசத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் எலக்ட்ரீசியன் (Electrician) ஆக கூலி வேலை செய்து வருகிறேன். எனது மனைவி சாவித்திரி எங்கள் வீட்டு மாடியில் சுமார் 9 தையல் மிஷின்களை

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

அந்தப்பன் 9/7/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

J R [signature] 09/07/20

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

09/07/20 22.00 hrs.

Name பெயர் J. Rupagatharani
Rank நிலை ...................... No எண் ......

Inspector of police,
V&AC, Karur

**Continuation of Karur Vigilance and Anti-Corruption FIR in Cr.No. 04/2020.**

வைத்து தையல் தொழில் செய்து வருகிறார். எனக்கு சஞ்சனா என்ற மகள் உள்ளார். கடந்த 18.05.2018-ம் தேதி கிருஷ்ணராயபுரம் வட்டம், குப்பாச்சிப்பட்டி அஞ்சல், சிவாயம் வேப்பங்குடியில் வசிக்கும் திரு.சுப்பிரமணி என்பவரின் மனைவி திருமதி தேன்மொழியிடம் கரூர் நகராட்சிக்குட்பட்ட சணப்பிரட்டி (தொழிற்பேட்டை ஆசிரியர் காலனியில்) அ.பு.ச. 1395/A-ல் சுமார் 1089 சதுரடி காலி மனையிடத்தை கிரயமாக பெற்றேன். அந்த இடத்தில் குடிசைமாற்று வாரியத்தினால் ஒதுக்கப்பட்ட மானியம் மற்றும் HDFC வங்கியில் கடன் பெற்று தரைத்தளத்திலும், மேல்தளத்திலும் வீடு கட்டினேன். மேல் தளத்தில் கான்கீரிட் போடாமல் தகர சீட் போட்டு வைத்துள்ளேன். எனது வீட்டிற்கு வீட்டு வரி நிர்ணயம் செய்ய கரூர் நகராட்சியில் கடந்த 18.11.2019-ம் தேதி விண்ணப்பித்திருந்தேன். அப்போது அங்கிருந்த நகராட்சி ஊழியர் ரூ.100/- கட்ட வேண்டும் என்று கூறினார். நானும் ரூ.100/- செலுத்தினேன். அதற்கு எனக்கு கரூர் நகராட்சியிலிருந்து ரசீது கொடுக்கப்பட்டது. அதற்கு பின்பு கரூர் நகராட்சிக்கு பலமுறை சென்று எனது விண்ணப்பம் சம்மந்தமாக எங்கள் பகுதியைச் சேர்ந்த வருவாய் உதவியாளர் திருமதி.ரேவதி என்பவரிடம் கேட்டதற்கு விரைவில் வீட்டு வரி நிர்ணயம் செய்து வழங்கப்படும் என்று கூறினார். அதன்பின்பு கடந்த 26.06.2020-ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு எங்கள் வார்டு (35-வது வார்டு) வருவாய் உதவியாளர் திருமதி.ரேவதி மற்றும் நகராட்சியை சேர்ந்த ஒரு அதிகாரி எனது வீட்டிற்கு வந்து வீட்டை அளந்து அளவீடுகளைக் குறித்துக் கொண்டு சென்றனர். அன்றைய தினமே மாலை சுமார் 06.30 மணிக்கு கரூர் நகராட்சி ஆணையர் அவர்கள் வருவாய் உதவியாளர் திருமதி.ரேவதி அவர்களுடன் எனது வீட்டிற்கு வந்து ஆய்வு செய்துவிட்டு சென்றனர். அதன்பின்பு 02.07.2020-ம் தேதி மாலை சுமார் 06.00 மணிக்கு வருவாய் உதவியாளர் எனது வீட்டிற்கு வந்து வீட்டு வரி நிர்ணயம் செய்வது சம்மந்தமாக பேசினார். அப்போது நான் வீட்டு வரி நிர்ணயம் செய்து எப்போது கொடுப்பீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் ரூ.40,000/- செலவாகும் என்று கூறினார். பின்பு நான் இவ்வளவு வரி கட்டவேண்டுமா என்று கேட்டேன். அதற்கு அவர் விபரம் புரியாத ஆளாக இருக்கிறீர்கள், வீட்டு வரி நிர்ணயம் செய்து வழங்க ஏற்பாடு செய்வதற்கு எனக்கு கொடுக்க வேண்டிய பணம் என்றும், இந்த பணத்தை கொடுத்தால் தான் வரி நிர்ணயம் செய்து வழங்க முடியும் என்றும் கூறிவிட்டு சென்றுவிட்டார். என்னிடம் அவ்வளவு பணம் இல்லாததால் 06.07.2020-ம் தேதி இரவு சுமார் 07.30 மணிக்கு கரூர் நகராட்சி அலுவலகம் சென்று வருவாய் உதவியாளர் திருமதி.ரேவதி அவர்களை சந்தித்து பேசினேன். அப்போதும் அவர் ரூ.40,000/- கொடுத்தால் தான் வேலை முடியும் என்று கண்டிப்பாக கூறிவிட்டார். நான் அவ்வளவு பணம் புரட்ட முடியாது என்று என் நிலைமையை எடுத்து கூறிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்பு மறுநாள் 07.07.2020-ம் தேதி இரவு சுமார் 07.45 மணிக்கு கரூர் நகராட்சி அலுவலகம்

சென்று வருவாய் உதவியாளர் திருமதி.ரேவதி அவர்களை சந்தித்து பேசினேன். அப்போதும் அவர் ரூ.40,000/- கொடுத்தால் தான் வீட்டு வரி நிர்ணயம் செய்து வழங்க முடியும் என்று கறாராக கூறினார். அப்போது நான் மிகவும் சிரமப்படுவதையும், கொரானா நோய் தொற்று காரணமாக வேலைக்கு எங்கும் செல்ல முடியாத சூழ்நிலை இருப்பதாகவும் எனக்கு தெரிந்த பைனான்ஸில் ரூ.10,000/- கேட்டிருப்பதாகவும் கூறினேன். அதற்கு வருவாய் உதவியாளர் சரி முதல் தவணையாக இந்த ரூ.10,000/-யை கொடுங்கள் வரி நிர்ணயம் செய்து பிறகு மீதி பணத்தை கொடுங்கள் என்று கூறினார். மேலும் இந்த ரூ.10,000/-யை ஏற்பாடு செய்துவிட்டு அவருக்கு போன் பண்ண வேண்டும் என்று கூறினார். பணத்தை எனது வீட்டிற்கே வந்து வாங்கி கொள்வதாக கூறினார். அவருக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாததால், எனக்கு வீட்டு வரி நிர்ணயம் செய்த வழங்க ஏற்பாடு செய்வதற்கு ரூ.10,000/- லஞ்சமாக கேட்ட கரூர் நகராட்சி வருவாய் உதவியாளர் திருமதி.ரேவதி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அவர் கேட்ட லஞ்ச பணம் ரூ.10,000/-யை கொண்டு வந்திருக்கிறேன். கரூர் நகராட்சியில் கொடுத்த ரசீது நகல் இந்த புகாருடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு Sd/- அந்தப்பன், 09.07.2020. Sir, Received the complaint on 09.07.2020 at 19.45 hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources. Complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, DVAC, Chennai. I am registering a case in Karur V&AC Cr.No.04/2020, u/s. 7 (a) of PC Act 1988 as amended by the PC (Amendment) Act 2018 on 09.07.2020 at 21.00 hrs and took up investigation Sd/- J.Rupageetharani, 09.07.2020, (J.Rupageetharani) Inspector of Police, V&AC, Karur.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் திரு. அந்தப்பன் அவர்களின் அசல் புகார் மனு ஆகியவற்றை இணைத்து மேன்மைமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நடுவர், கரூர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

JRu 09/07/20

**(ஜெ.ரூபாகீதாராணி)**
**காவல் ஆய்வாளர்,**
**ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு**
**கரூர்**
**09.07.2020.**